**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 15/2016**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–2 ராஜமாணிக்கம்** – திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜமாணிக்கம் | கிராமம் | தரகம்பட்டி |
| த/பெ / க/பெ. | மலையாளன் | தொழில் | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் |
| தாலுக்கா | கடவூர் | மதம் | |
| ஜாதி | | வயது | 55 |

**முதல் விசாரணை**

எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். கதவு எண்.2/166 ஏ, அதன் பழைய சர்வே எண்.421/3 ஆகும். புதிய நத்தம் சர்வே எண்.712/9. மேற்படி வீட்டிற்கான வரி இரசீது தற்போது காத்தவராயன் பெயரில் உள்ளது. பி.சா.ஆ.3 வீட்டு வரி இரசீதுகள் எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டதா என்றால் ஆமாம்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) கதவு எண்.2/166 ஏ என்பது எந்த வருடம் எங்கள் அலுவலகத்தால் கொடுக்கப்பட்டது என குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் முடியாது. கதவு எண்.2/166 ஏ வீட்டிற்கான வரி இரசீது காத்தவராயன் பெயரில் உள்ளது என எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் காத்தவராயன் பெயரில் உள்ள பத்திரத்தின் அடிப்படையில் சொல்கிறேன். நான் எனது அலுவலக குறிப்பேடுகளை பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த வருடத்திலிருந்து எனது அலுவலக பதிவேடுகளை பார்த்தேன் என்றால் 2013 ம் வருடம் முதல் தற்போது வரை உள்ள பதிவேடுகளை பார்த்தேன். மேற்படி பதிவேடுகள் எங்கள் அலுவலகத்தில் தான் உள்ளது. 2013 ம் வருடத்திற்கு முந்தைய பதிவேட்டை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அது காளியம்மாள் பெயரில் இருந்தது. அந்த பதிவேட்டை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை.

2) எங்கள் அலுவலகத்தில் உள்ள வரி இரசீது புத்தகத்தை பார்வையிட்டால் கதவு எண்.2/166 ஏ யார் பெயரில் இருந்தது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டை தாக்கல் செய்ய முடியுமா

என்றால் முடியும். மேற்படி பதிவேடு மிகவும் பழையது, தேடிதான் எடுக்க வேண்டும். பொதுவாக வீட்டு வரியில் பெயர் மாற்றம் எதன் அடிப்படையில் செய்வோம் என்றால் கொடுக்கும் ஆவணத்தின் அடிப்படையில் செய்வோம். காத்தவராயன் எந்த தேதியில் மனு கொடுத்து தன் பெயருக்கு வரி மாற்றம் செய்ய சொன்னார் என்பதை எங்கள் அலுவலக பதிவேட்டை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான்.

3) கதவு எண்.2/166 ஏ–க்கான புல எண்.712/9 என்றால் சரியல்ல, 712/10 ஆகும். காத்தவராயன் கொடுத்த முதல் ஆவணத்தில் புல எண்.712/9 என இருந்தது. பின்னிட்டு அதை பிழை திருத்தல் பத்திரத்தின் மூலம் சர்வே எண்.712/10 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நான் இங்கு கொண்டு வந்துள்ள ஆவணங்களை காத்தவராயன் தான் கொடுத்தாரா என்றால் ஆமாம். நான் தற்போது கொண்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் எனது அலுவலக பதிவேடுகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்காததால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இங்கு கொண்டு வந்துள்ள ஆவணங்களை காத்தவராயன் எப்போது என்னிடம் கொடுத்தார் என்றால் 05.11.2025 ல் கொடுத்தார். 2013 ம் வருடத்தில் இருந்து காத்தவராயன் பெயரில் வரி இரசீது இருப்பதாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் உள்ள 05.11.2025 தேதியிட்ட காத்தவராயன் கொடுத்துள்ள மனுவில் எங்கள் அலுவலக முத்திரையோ, எங்களால் பெறப்பட்ட குறிப்போ இல்லை என்றால் சரிதான்.

<u>**நீதிமன்ற கேள்வி**</u>

நான் எனது அலுவலக பதிவேடுகளை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. அசல் அலுவலக பதிவேடுகளை கொண்டு வர மீண்டும் வாய்தா கொடுத்தால் கொண்டு வர முடியுமா என்றால் முடியும். அசல் பதிவேடுகளை கொண்டு வர வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 15/2016**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–3 மாரியப்பன்** – திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | பிச்சைப்பிள்ளை | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 57 |

**<u>முதல் விசாரணை</u>**

1) எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. எனக்கு சொந்த ஊர் தரகம்பட்டி. 3 தலைமுறைகளாக தரகம்பட்டியில் வசிக்கிறோம். நான் தரகம்பட்டி ஊர் கவுண்டர். தரகம்பட்டியை சேர்ந்த பெரியசாமி பண்டாரத்தை தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு இரண்டு பெண்மக்கள். ஆண் வாரிசு கிடையாது. பெண் மக்கள் பெயர் காளியம்மாள், தங்கம்மாள் ஆகும். தங்கம்மாள் தற்போது உயிருடன் இல்லை. பெரியசாமி பண்டாரமும் உயிருடன் இல்லை. காளியம்மாள் இருக்கிறார். பெரியசாமி பண்டாரம் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை யாருக்காவது விற்பனையோ, தானமோ செய்துள்ளாரா என்றால் இல்லை.

2) பெரியசாமி பண்டாரம் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு ஆனந்த் மற்றும் சுந்தரநாதன் இருவருக்கும் கொடுக்க வேண்டிய பாக்கி தொகைக்காக ஒரு ஈடு ஆவணம் எழுதிக்கொடுத்தார். பின்னிட்டு பெரியசாமி பண்டாரத்திடம் அந்த பணத்தை பெற்றுக்கொண்டு அவர் எழுதிக்கொடுத்த ஈடு கடன் ஆவணத்தை ரத்து செய்து தருமாறு ஆனந்த் சுந்தரநாதனிடம் பஞ்சாயத்து செய்து அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். பின்னிட்டு ரத்து செய்து கொடுத்தார்களா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனந்த், சுந்தரநாதன் இருவருக்கும் பெரியசாமி, காளியம்மாள், தங்கம்மாள் மூவரும் 1983 ம் வருடத்தில் ஏதேனும் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை.

3) பெரியசாமி பண்டாரம் எழுதிய உயில் ஆவணத்தில் நான் சாட்சியம் கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் அந்த சாட்சி கையெழுத்து என்னுடையது தான். தற்போதும் தாவா சொத்தில் காளியம்மாள் தான் அனுபவத்தில் இருக்கிறார்.

சண்முகம், சுந்தரநாதன், ஆனந்த் எப்போதும் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரிதான்.

__வாதி தரப்பில் குறுக்கு விசாரணை__

1) தரகம்பட்டியில் என்னை தவிர வேறு யாராவது ஊர் கவுண்டர் இருக்கிறாரா என்றால் இல்லை. நாங்கள் பரம்பரையாக ஊர் கவுண்டர் பதவியில் இருக்கிறோமா என்றால் ஆமாம். வாதி சண்முகத்தை தெரியும். வாதி சண்முகம் தரகம்பட்டியில் வசிக்கிறாரா என்றால் இல்லை, எலக்ட்ரிக்கல் கடை வைத்துள்ளார். மேற்படி கடை தரகப்பட்டி – பாலவிடுதி செல்லும் பிரதான சாலையில் உள்ளது என்றால் சரிதான். சண்முகத்தின் வடக்கில் மூக்கையா கடை உள்ளதா என்றால் உள்ளது. மேற்குப்புறம் பெரியசாமி (1ம் பிரதிவாதி காளியம்மாள் தகப்பனார்) இடம் உள்ளது. தென்புறத்தில் 4ம் பிரதிவாதி காத்தவராயன் வகையறா இடம் உள்ளது.

2) இந்த வழக்கு யாரால் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் யார் யார் என்றும், அவர்கள் என்ன எதிர் வாதம் செய்கிறார்கள் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் 2–1/2 சென்ட் விஸ்தீரணம், சர்வே எண் தெரியாது. சண்முகம் கடை வைத்துள்ள இடத்தை பெரியசாமி பண்டாரத்திடம் இருந்து கிரையமாக வாங்கியுள்ளார் என்றால் கிரையம் வாங்கியிருப்பதாக சொன்னார். யார் சொன்னார்கள் என்றால் காளியம்மாள் வகையறா சொன்னார். பெரியசாமி பண்டாரத்திற்கும், மூக்கையா என்பவர் குடும்பத்திற்கும் இடையே ஏதாவது வழக்கு நடைபெற்றதா என்றால் அது பற்றி தெரியவில்லை. சண்முகம் கிரையம் வாங்கியது காளியம்மாள் சொல்லி தான் தெரியுமா என்றால் ஆமாம்.

3) வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து மட்டும் தான் போட்டுள்ளேன் என்றால் நானும், ஆனந்த், மாரியப்பன், நல்லுசாமி ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளோம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நாங்கள் பைசல் செய்தது சம்பந்தமாக எந்த குறிப்பும் இல்லை என்றால் ஞாபகம் இல்லை. ஈட்டு கடன் ஆவணத்திற்கும், கிரைய ஆவணத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உயில் ஆவணம் சம்பந்தமாக காளியம்மாள் குடும்பத்தார் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.2 உயில் ஆவணம் சம்பந்தமாக இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சி எதுவும் அளிக்கவில்லை.

4) பெரியசாமி பண்டாரத்திற்கும், சண்முகத்திற்கும் இடையே மற்ற பரிவர்த்தனைகள் நடந்துள்ளது என்றும் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்பந்தமாக சார்பதிவாளர் அலுவகத்தில் ஏற்பட்ட பரிவர்த்தனைகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காளியம்மாளிடம் ஏதேனும் ஆவணம் எழுதிக்கொடுத்தாயா என்று கேட்டேனா என்றால் இல்லை. சண்முகம், பெரியசாமி பண்டாரம், காளியம்மாள் இவர்களுக்குள் நான் ஏதேனும் பைசல் செய்தேனா என்றால் இல்லை. தற்போது தாவா சொத்திற்கான பட்டா, சிட்டா, வீட்டு வரி இரசீது யார் பெயரில் உள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க காத்தவராயன் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். நான் காத்தவராயன் கேட்டுக் கொண்டதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்தல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 15/2016**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–4 மாரியப்பன் –** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | மாணிக்கம்பிள்ளை | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 51 |

**முதல் விசாரணை**

எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. நான் தரகம்பட்டியில் வசிக்கிறேன். எனது குடும்பம் ஆதியில் இருந்து தரகம்பட்டியில் தான் இருந்து வருகிறோம். பி.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னை பி.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட யார் அழைத்தது என்றால் ஆனந்த், சுந்தரநாதன் இருவரும் சொன்னதன் பேரில் கையெழுத்து போட்டேன். நான் ஆனந்த், சுந்தர நாதன் கடையில் வேலை பார்த்து வந்தேன். தற்போது நான் விவசாயம் செய்து வருகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பட்டா, வீட்டு வரி இரசீது யார் பெயரில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. சண்முகம், பெரியசாமி பண்டாரம், காளியம்மாள், தங்கம்மாள் ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட பத்திரங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சண்முகம் தரகம்பட்டி மெயின் ரோட்டில் எலக்ட்ரிக்கல் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். எத்தனை வருடமாக வைத்துள்ளார் என்றால் சுமார் 20 வருடமாக வைத்திருப்பார். காத்தவராயன், காளியம்மாள் தரகம்பட்டியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். காத்தவராயன் தான் என்னை அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். காத்தவராயன் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) சுந்தரநாதன், ஆனந்த் இருவரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். ஆனந்த் இறந்து சுமார் 4 வருடங்கள் இருக்கும். அதற்கு 4 வருடத்திற்கு முன்பு சுந்தரநாதன் இறந்துவிட்டார். பெரியசாமி பண்டாரம், தங்கம்மாள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். தங்கம்மாளுக்கு வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் அவர் வெளியூர் சென்று விட்டதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**